**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2057, திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம், ஆவணி மாதம் 02–ம் தேதி**

**2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19–ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் –90/2021**

**CNR No: TNSV15001629–2021**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர், திருப்புவனம் காவல்நிலையம் அதன் குற்ற எண்.247/2019 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | சுரேஷ்குமார், த/பெ.திருவேங்கடம், East street, மைத்தன்பட்டி, திருமங்கலம் தாலுகா. |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவு 304( A)–ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவு 304( A)–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304( A)–ன் கீழ் |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | -- |
| குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 29.07.2019 |
| எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 31.03.2023 |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | அ.சா.1: மு.வி 07.08.2026 & கு.வி: இல்லை<br>அ.சா.2: மு.வி 12.08.2026 &கு.வி: இல்லை<br>அ.சா.3: மு.வி 12.08.2026 &கு.வி: இல்லை<br>அ.சா.4: மு.வி &கு.வி: 14.08.2026 |
| பல்வகை மனு அதன் முடிவு | ---- |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 17.08.2026 |
| தீர்வு | **முடிவாக,** எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து |

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:06:17 +0530

| | |
|---|---|
| | செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு கடந்த 17.08.2026–ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது, அரசுக்காக கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–1 திருமதி. R.திலகராணி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கில் கடந்த 10.07.2019ம் தேதி காலை 06.45 மணியளவில் விரதனூர் To மதுரை ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 20 G 1675 என்ற பதிவெண் கொண்ட TEMPO TRAVELLER AMBULANCE–ஐ அதன் ஓட்டுநரான எதிரி சுரேஸ்குமார் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பொட்டபாளையம் பஸ் ஸ்டாப் அருகே ரோட்டின் இடது ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த சுப்பிரமணியன் என்பவரின் மீது மோதியதில் சுப்பிரமணியத்திற்கு தலையில் பலத்த காயத்தை ஏற்படுத்தி அதனால் மேற்படி சுப்பரிமணியனுக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது. இதுவே குற்றம். எனவே எதிரியானவர் மீது இதச பிரிவு 304(A) ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற புகார் மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 304( A)–ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு போதிய முகாந்திர ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கின் எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றம் பற்றி வினவ எதிரி அவற்றை தம்மிச்சையாக மறுத்துக் கூறினார்.

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:06:24 +0530

எனவே இருதரப்பினர்களை கேட்டும் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் எதிரி மீது முதல் நோக்கில் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரங்கள் இருந்தமையால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304( A)–ன் கீழ் குற்றச்சாட்டு பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்தார்.

5)இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–**

6.1)அ.சா.1 பாண்டியம்மாள் தனது சாட்சியத்தில், தான் பாட்டம் என்ற கிராமத்தில் வசித்து மக்கள் நல பணியாளராக பணி செய்து வருகிறதாகவும், விபத்தில் இறந்து போன சுப்பிரமணியன் தனது அப்பா ஆவார் என்றும், தான் எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன் என்றும், கடந்த 2019ம் வருடம் 7வது மாதம் 10ம் தேதி காலை 06.45 மணியளவில் பொட்டபாளையம் அருகே தனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக ஒருவர் தனக்கு தகவல் கூறினார் என்றும், தான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று தனது அப்பாவைப் பார்த்தேன் என்றும், தனது அப்பா இறந்துவிட்டார் என மருத்துவர் தகவல் கூறினார் என்றும், விபத்து எவ்வாறு நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி மீது தான் புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி புகார் மனு அ.த.சா.ஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 கிரி தனது சாட்சியத்தில், தான் பாட்டம் கிராமத்தில் குடியிருந்து தனியார் மில்லில் பணி செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 பாண்டியம்மாள் தனது மாமா மகள் ஆவார் என்றும், அ.சா.1ம் ஆஜர் எதிரியும் சமாதானமான விவரம் தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 சின்னப்பாண்டியம்மாள் தனது சாட்சியத்தில், தான் பாட்டம் கிராமத்தில்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:06:31 +0530

குடியிருந்து 100 நாள் கூலி பணி செய்து வருகிறதாகஹும் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 பாண்டியம்மாள் தனது உடன்பிறந்த அக்கா ஆவார் என்றும், அ.சா.1ம் ஆஜர் எதிரியும் சமாதானமான விவரம் தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 கண்ணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 10.07.2019ஆம் தேதி காலை 08.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவர் திருப்புவனம் காவல் நிலைய நிலையபொறுப்பிலிருந்தபோது பாட்டம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகள் பாண்டியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 247/2019 பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 என்றும், அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை நீதிமன்றத்திற்கும், பிறநகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார் என்றும், அதன் பின்பு இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாள் காலை 09.30 மணிக்கு சாட்சிகள் பிச்சைமணி மற்றும் முத்துப்பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 என்றும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 என்றும், பின்பு சாட்சிகள் பாண்டியம்மாள், கிரி, வீரக்குமார், சின்னப்பாண்டியம்மாள் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்பு அதே நாள் 11.20 மணிக்கு அரசு ராஜாஜி மருத்துவமனையிலிருந்து இவ்வழக்கு விபத்தில் காயமடைந்த சுப்பிரமணியன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதசவிலிருந்து 304(A) இதசவாக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.5 என்றும், அதன் பின்பு 10.07.2019ம் தேதியன்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து 13.00 – 14.00 மணி வரை இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்துள்ளார் என்றும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 என்றும், அதன் பின்பு இவ்வழக்கு எதிரியை தேடி வந்த நிலையில் 11.07.2019ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் மதுரை – விராதனூர் ரோடு பொட்டபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:06:38 +0530

பிணையில் விடுவித்துள்ளார் என்றும், அதன் பின்பு இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் செந்தில்குமார் தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சுப்பிரமணியன் என்பவரின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை காவலர் ராஜேஸ்வரன் 1824 மூலம் கொடுத்து அனுப்பியுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 20 G 1675 என்ற பதிவெண்கொண்ட டெம்போ டிராவலர் (ஆம்புலன்ஸ்) வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. மோகனப்பிரியா, அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார் என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.7 என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என சான்றுவழங்கியுள்ளார் என்றும், விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் பிரேதத்தை பரிசோதனை செய்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் அருண்பாலன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார் என்றும், பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.8 என்றும், பிரேத பரிசோதனை சான்றிதழில் காயம்பட்டவர் அவருக்கு ஏற்பட்ட The deceased would appear to have died of multiple injuries என சான்று வழங்கியுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் பிரேதத்தை மருத்துவருக்கு அங்க மச்ச அடையாளம் காட்டிய காவலர் ராஜேஸ்வரன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 304 (A) இதசவின் கீழ் 29.07.2019-ம் தேதியன்று கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை முன்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச.313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரி அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா, என்று வினவிய போது எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார் .

8) இவ்வழக்கு எதிரி மீது அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்னையாகும்.

9) **தீர்வு-**

அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில்கடந்த 10.07.2019ம் தேதி காலை 06.45 மணியளவில் விரதனூர் To மதுரை ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 20 G

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:06:44 +0530

1675 என்ற பதிவெண் கொண்ட TEMPO TRAVELLER AMBULANCE–ஐ அதன் ஓட்டுநரான எதிரி சுரேஸ்குமார் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பொட்டபாளையம் பஸ் ஸ்டாப் அருகே ரோட்டின் இடது ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த சுப்பிரமணியன் என்பவரின் மீது மோதியதில் சுப்பிரமணியத்திற்கு தலையில் பலத்த காயத்தை ஏற்படுத்தி அதனால் மேற்படி சுப்பரிமணியனுக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது. இதுவே குற்றம். எனவே எதிரியானவர் மீது இதச பிரிவு 304(A) ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதனை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்தபட்டுள்ளனர்.

10) அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் எதிரி தான் இந்த குற்றச்சம்பவத்தை செய்தார் என்று சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் வாதிட்டார்.

11) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 பாண்டியம்மாள் தனது சாட்சியத்தில், கடந்த 2019ம் வருடம் 7வது மாதம் 10ம் தேதி காலை 06.45 மணியளவில் பொட்டபாளையம் அருகே தனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக ஒருவர் தனக்கு தகவல் கூறினார் என்றும், தான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று தனது அப்பாவைப் பார்த்தேன் என்றும், தனது அப்பா இறந்துவிட்டார் என மருத்துவர் தகவல் கூறினார் என்றும், விபத்து எவ்வாறு நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி மீது தான் புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி புகார் மனு அ.த.சா.ஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.1ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:06:51 +0530

12) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 கிரி தனது சாட்சியத்தில், அ.சா.1ம் ஆஜர் எதிரியும் சமாதானமான விவரம் தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.2ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) இவ்வழக்கில் கேள்விபட்ட சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 சின்னப்பாண்டியம்மாள் தனது சாட்சியத்தில், அ.சா.1ம் ஆஜர் எதிரியும் சமாதானமான விவரம் தனக்கு தெரியும் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.3ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 கண்ணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 10.07.2019ஆம் தேதி காலை 08.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவர் திருப்புவனம் காவல் நிலைய நிலையபொறுப்பிலிருந்தபோது பாட்டம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகள் பாண்டியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 247/2019 பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை நீதிமன்றத்திற்கும், பிறநகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார் என்றும், அதன் பின்பு இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாள் காலை 09.30 மணிக்கு சாட்சிகள் பிச்சைமணி மற்றும் முத்துப்பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்பு சாட்சிகள் பாண்டியம்மாள், கிரி, வீரக்குமார், சின்னப்பாண்டியம்மாள் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்பு அதே நாள் 11.20 மணிக்கு அரசு

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:06:58 +0530

ராஜாஜி மருத்துவமனையிலிருந்து இவ்வழக்கு விபத்தில் காயமடைந்த சுப்பிரமணியன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதசவிலிருந்து 304(A) இதசவாக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன் பின்பு 10.07.2019ம் தேதியன்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து 13.00 – 14.00 மணி வரை இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்துள்ளார் என்றும், அதன் பின்பு இவ்வழக்கு எதிரியை தேடி வந்த நிலையில் 11.07.2019ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் மதுரை – விராதனூர் ரோடு பொட்டபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும், அதன் பின்பு இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் செந்தில்குமார் தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சுப்பிரமணியன் என்பவரின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை காவலர் ராஜேஸ்வரன் 1824 மூலம் கொடுத்து அனுப்பியுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 20 G 1675 என்ற பதிவெண்கொண்ட டெம்போ டிராவலர் (ஆம்புலன்ஸ்) வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. மோகனப்பிரியா, அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார் என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என சான்றுவழங்கியுள்ளார் என்றும், விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் பிரேதத்தை பரிசோதனை செய்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் அருண்பாலன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார் என்றும், பிரேத பரிசோதனை சான்றிதழில் காயம்பட்டவர் அவருக்கு ஏற்பட்ட The deceased would appear to have died of multiple injuries என சான்று வழங்கியுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் பிரேதத்தை மருத்துவருக்கு அங்க மச்ச அடையாளம் காட்டிய காவலர் ராஜேஸ்வரன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 304 (A) இதசவின் கீழ் 29.07.2019–ம் தேதியன்று கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை முன்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சம்பவ சாட்சிகளின் சாட்சியத்தை வைத்தே எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றி இந்நீதிமன்றம் தீர்மானிக்க முடியும். ஆனால் இவ்வழக்கின் சம்பவ சாட்சிகள் யாரும் எதிரி தான்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:07:04 +0530

இக்குற்றச்செயல்களை செய்தார் என்று அரசு தரப்பில் யாதொரு சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இவ்வழக்கில் எதிரி தான் குற்றச் செயல்களை செய்தார் என்ற அரசுத்தரப்பு வழக்கானது அரசுத்தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15) **முடிவாக,** எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304( A)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 –ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:07:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

அரசு தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| அ.சா.1 | பாண்டியம்மாள், நிகர்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | கிரி, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | சின்னப்பாண்டியம்மாள், கேள்விபட்ட சாட்சி |
| அ.சா.4 | கண்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

அரசுதரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1/அ.சா.1 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2/அ.சா.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3/அ.சா.4 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4/அ.சா.4 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5/அ.சா.4 | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.6/அ.சா.4 | பிரேத விசாரணை அறிக்கை |

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.7/அ.சா.4 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.8/அ.சா.4 | பிரேத பரிசோதனை சான்று |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள் இல்லை**

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்– இல்லை

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.19 18:07:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குறிப்பு–

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்திவைக்கப்படவில்லை.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை**
**நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.90/2021**
**தீர்ப்புரை**
**வரைவு/சீரான**
**நாள்: 19.08.2026**